[2012 ஏப்ரல் 20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் பால் வரத்து அதிகமிருப்பின் ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதி பெற்று அங்கு பால் குளிரூட்டும் நிலையம் அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 135, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

135—

தொழிற்பேட்டை

***5206—திரு. செ. காமராஜ்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, பாலவிடுதி பகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதி, பாலவிடுதியில் அரசு தொழிற்பேட்டை அமைக்கத் தேவையான அரசுப் புறம்போக்கு நிலங்கள் கிடைக்கும்பட்சத்தில், சிட்கோ நிறுவனம்மூலம் தொழிற்பேட்டை அமைக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.

2012 *ஏப்ரல்* 20]

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ் அவர்கள்.*

திரு. செ. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்களின் பாதுகாவலர், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, எனது கிருஷ்ணராயபுரம் தொகுதி, பாலவிடுதி பகுதியில் அரசு தொழிற்பேட்டை அமைக்க அரசுப் புறம்போக்கு நிலங்கள் உள்ளன. அந்த நிலத்தை, தமிழகத்தை தொழில் துறையில் முதன்மை மாநிலமாக்க அயராது பாடுபட்டுவரும் மாண்மிகு முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஆய்வு செய்து, நிலத்தைத் தேர்வு செய்து, தொழிற்பேட்டை அமைத்துத் தரவேண்டும். எனது தொகுதி வறட்சிப் பகுதியாக உள்ளதை வளமான பகுதியாக மாற்றிட, வாழும் வள்ளல், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குப் பணிந்து வணங்கி இக்கோரிக்கையை வைக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. அருண் சுப்பிரமணியன், ஒரு நிமிடம் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சரின் பதிலுக்குப் பின்னர், உறுப்பினர் கோரிக்கை வைத்து முடித்துவிட்டார். (குறுக்கீடு) அடுத்த துணைக் கேள்விக்குப் போகிறேன். திரு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *திருத்தணி தொகுதிக்குட்பட்ட ஆர்.கே. பேட்டை, பள்ளிப்பட்டு, திருத்தணி ஒன்றியம் பகுதிகளில் மிக அதிகமான பல ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பயிர் சாகுபடிக்குத் தகுதியில்லாத நிலங்கள் உள்ளன. அதேபோன்று அரசுப் புறம்போக்கு நிலங்களும் மலை சார்ந்த நிலங்களும் அதிகமாக உள்ளன. அந்த நிலங்களைப் பயன்படுத்தி, அங்கு தொழிற்பேட்டை அமைத்திட அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி சட்டமன்றத் தொகுதி, ஆர்.கே. பேட்டை ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் அரசுப் புறம்போக்கு நிலங்கள் அதிகமாக இருக்கும்பட்சத்தில், மாவட்ட ஆட்சித் தலைவருடைய ஒப்புதல் பெற்று, மேலும் போதுமான நிதியாதாரங்களுடன் தொழில் திட்டங்களுக்குண்டான திட்ட அறிக்கையுடன் ஆர்வமுள்ள 20 தொழில் முனைவோர்கள் முன்வந்தால், தொழில் முனைவோர் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர், பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம் ஆகியோருடன் கலந்தாலோசித்து, புதிய தொழிற்பேட்டை அமைப்பதற்கு அரசு தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின்மூலமாக தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 136, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

136—

கால்நடை கிளை நிலையம்

***4121—முனைவர் கோவி. செழியன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் தொகுதி, அம்மல்குடி ஊராட்சியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருவிடைமருதூர் தொகுதி, அம்மல்குடி ஊராட்சியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிறார். அந்த அம்மல்குடி ஊராட்சியிலே 3,000 கால்நடைகளுக்கும் குறைவான